1973 ஏப்ரல் 3]

திரு. ஜே. ஜேம்ஸ்: காண்டிராக்ட் சிஸ்டத்தைக் கூடிய வரையில் அகற்ற வேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கும்போது அரசாங்க சிமெண்ட் ஆலையில் காண்டிராக்ட் முறையை வைத்துக்கொண்டிருப்பது சரியா? அதை அகற்ற அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தொழிற்சாலையில் மூட்டையை வெளியே கொண்டு போகும்போது யார் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ அவர்கள்தான் இந்த மூட்டையை லோட் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு சுப்பு அவர்கள் கேட்டுக்கொண்டபடி இதைப் பற்றிப் புனர் பரிசிலனைசெய்து நாமே செய்யலாமா என்று பார்க்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தொழிற்சாலைகளில் லோடிங், அன்லோடிங் உட்பட தொழிற்சாலைத் தொழிலாளர்கள்தான் செய்கிறார்கள். காண்டிராக்ட் லேபர் அபாலிஷன் ஆக்ட் வந்தபிறகும் அரசாங்கத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் முறை இருப்பது சரியல்ல என்ற காரணத்தால் காண்ட்ராக்ட் தொழிலாளர்களை ஆலைத் தொழிலாளர்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிக் காண்ட்ராக்ட் முழுவதையும் விட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, அதைப்பற்றிச் சட்டப் பிரச்சினை எதுவும் எழவில்லை.

Purchase of Implements by Mineral Development Project

* 621 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Mineral Development Project have purchased a number of diamond drill bits and reaming shells during the calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: தமிழ்நாட்டுக் கனிவளர்ச்சிக் கழகம் வைர வியாபார வளர்ச்சி அபிவிருத்திக்காக எடுத்துக் கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது மினரல் ப்ராஜக்ட்ஸ் சம்பந்தப்பட்டது. வியாபாரம் சம்பந்தப்பட்டது அல்ல.

திரு. என். டென்னிஸ்: தமிழக கனி வளர்ச்சிக் கழகம் வைர அபிவிருத்தி சம்பந்தமாக எக்ஸ்ப்ளோரேஷன் சம்பந்தமாக எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை எடுத்ததற்குப் பிறகுதான் வியாபாரம், பயன்பற்றிச் சொல்ல வேண்டும். ஆராய்ச்சிபற்றித்தான் பதில் சொன்னேன். அப்படிப்பட்ட முயற்சி இல்லை என்று சொன்னேன்.

Preventing benami loan transactions in Co-operative Societies.

* 622 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to amend the Co-operative Societies Act with a view to prevent benami loan transactions taking place in the Co-operative Credit Societies?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டத்தில் 64, 65, 71 ஆகிய பிரிவுகளின்கீழ் போதிய அதிகாரம் இருக்கிறது. எனவே, சட்டத்தை இப்போது திருத்தத் தேவையில்லை.

திரு. என். கே. பழனிசாமி: பெருவாரியான க்ரெடிட் சொசைடிகளில் தலைவர்கள் பினாமியாக பல பேர்மீது கடன் போட்டு அதை எடுத்துக்கொள்கிறார்கள். அதைக் குறிப்பிட்ட நேரத்தில் கட்டுவது இல்லை என்ற காரணத்தால் பல சொசைடிகள் ஃபங்ஷன் பண்ணுமல் இருக்கின்றன. ஆகவே, சர்க்கார் இப்போது இருக்கும் முறையை மாற்றி லோன் விண்ணப்பம் போடுபவர்கள் நேரடியாக வந்து பணத்தை வாங்குவதற்கான முறையை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இப்போது கடன் விண்ணப்பம் போடுவதும், கடன்களை விநியோகம் செய்வதும் நேரடியாகத்தான் நடக்கிறது. அரசாங்க அதிகாரிகூட இருந்து விநியோகம் நடக்கிறது. இதிலே தவறுதல் நடக்குமானல் சீர்திருத்தம்செய்ய இப்போதுள்ள சட்டத்திலேயே இடம் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்போதுள்ள சட்டத்தில் இடம் போதவில்லை என்ற நிலையில்தான் பல பேர் பினாமியாகப் பணத்தை வாங்கிக்கொண்டு டௌட்ஃபுல் டெட்ஸ்—மீளாக் கடன் பல லட்சக்கணக்கான ரூபாய் கூட்டுறவுத் துறையிலே ஏற்படுகிறது. ஆகவே, லோனுக்கு அப்ளிகேஷன் போடும்போது ஃபோட்டோ வைக்க வேண்டுமென்றும், தலைவர் கையில் அதிகாரம் இருக்கக்கூடாது என்ற முறையிலும் சீர்திருத்தம் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஒவ்வொரு மனுவிலும் போட்டோ வைக்க வேண்டுமென்று சொன்னல் அதற்குரிய செலவை யார் கொடுப்பது? ஏழை எளியவர்கள் போட்டோ பிடித்து வைக்க பண வசதி இருக்கிறதா என்பது கேள்வி. தவறுதல் நடக்குமானல் இப்போதுள்ள சட்டத்திலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டிய அதிகாரம் இருக்கிறது. கேள்வி, சட்டத்தைத்திருத்த வேண்டுமா என்பது. திருத்தாமலே போதிய அதிகாரம் இருக்கிறது என்று விடை சொன்னேன்.